Registered as a Newspaper




# உதயன்




சுடர் : 39
கதிர் : 343
திங்கட்கிழமை
04 நவம்பர் 2024
ஐப்பசி 18
வள்ளுவர் ஆண்டு 2055
பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

# நாடாளுமன்றத் தேர்தல் நவம்பர் 14 இல் திட்டமிட்டபடி!

## திகதித் தெரிவில் எந்தத் தவறுமில்லை

### சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு தெரியப்படுத்தியது தேர்தல்கள் ஆணைக்குழு

**கொழும்பு, நவம்பர் 4**

**நாடாளுமன்றத் தேர்தலுக்காக ஜனாதிபதியால் நிர்ணயிக்கப்பட்டுள்ள திகதி தேர்தல் சட்டதிட்டங்கள் மற்றும் ஏற்பாடுகளுக்கு முரணானதாக அமையவில்லை என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு சட்டமா அதிபருக்குத் தெரியப்படுத்தியுள்ளது என அறியமுடிகின்றது.**

15

# அநுரவின் பட்ஜெட் 2025 மார்ச்சில்!



**கொழும்பு, நவ.4**
**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தின் கன்னி வரவு -செலவுத் திட்டம் எதிர்வரும் மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. நாடாளுமன்றத்**

15

## கணக்கு வாக்குப் பணம் திட்டமிடும் அநுர அரசு

கொழும்பு, நவ.4
புதிய நாடாளுமன்றத்தின் முதல்வார அமர்வின்போது நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கணக்கு வாக்குப் பணத்துக்குரிய (Vote on Account) யோசனையை முன்வைக்கவுள்ளார்.

15




"கடைசியில அரிசி அரசியலில அநுரவையும் இறக்குமதிக்கு போகவைச்சிட்டினம் பாருங்கோ"

### தட்டுப்பாட்டை நீக்குவதற்கு

## 3 லட்சம் தொன் அரிசி விரைவில் இறக்குமதி

கொழும்பு, நவ.4
3 இலட்சம் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று விவசாய அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

15

## சட்ட நடவடிக்கைக்குத் தயாராகும் லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு

கொழும்பு, நவ.4
லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் விசாரணைக்கு சமுகமளிக்காத அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
விசாரணைக்கு சமுகமளிக்காத அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளுக்கு எதிராகக் கட்டளை அனுப்பத் தங்களுக்கு அதிகாரம் உள்ளது என்றும், அந்தக் கட்டளையை ஏற்றுக்கொள்ளாத

15



## இனவாதத்தை எதிர்கொள்வதற்கு தமிழ்ப் பிரதிநிதித்துவம் அவசியம்

### மனோ கணேசன் அறிவுரை

கொழும்பு, நவ.4
இந்த நாட்டில் இன்னமும் இனவாதம் இருக்கின்றது. அதனால் எமக்கான தமிழ்ப் பிரதிநிதித்துவம் அவசியம். தமிழ்ப் பிரதிநிதித்துவத்தின் முக்கியத்துவத்தை தமிழ் பேசும் மக்கள் உணரவேண்டும்.

15

## இதுவரை 1,408 முறைப்பாடுகள்

கொழும்பு, நவ.4
எதிர்வரும் 14 ஆம் திகதி நடக்கவுள்ள பொதுத் தேர்தல் தொடர்

15

## வாகன இலக்கத் தகடு விநியோகம் நிறுத்தம்!

கொழும்பு, நவ.4
வாகன இலக்கத்தகடு விநியோகிக்கும் செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

15

## 9 மாதங்களில் 2 லட்சம் பேர் வெளிநாடுகளுக்கு

கொழும்பு, நவ.4
இந்த ஆண்டின் முதல் 9 மாதங்களில் 2 இலட்சத்து 40 ஆயிரத்து 109 பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.
இவர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக நாட்டில் இருந்து வெளியேறியுள்ளனர் என்று இலங்கை

15

## மாணவர்களுக்கு கொடுப்பனவு

கொழும்பு, நவ.4
பாடசாலை மாணவர்களுக்குப் பாடசாலைப் புத்தகங்களையும், உபகரணங்களையும் கொள்வனவு செய்வதற்குக் கொடுப்பனவு வழங்குவதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கண்டியில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தத் தகவலைத் தெரிவித்தார்.
தற்போதுள்ள அரசாங்கத்திடம் பணம்

15




மக்கள் ... தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசமைப்பினூடாக தமிழருக்குத் தீர்வு தேவை



**யாழ்ப்பாணம், நவ. 4**

**13 ஆம் திருத்தம் ஊடாக எதனையும் பெறமுடியாது. சமஷ்டி பொறிமுறையை உருவாக்கவேண்டும். அதற்கு புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்படவேண்டும். அதற்கான அழுத்தத்தை நாங்கள் கொடுப்போம்.**

-இவ்வாறு யாழ்.ஊடக அமையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, யாழ்.தேர்தல் மாவட்டத்தில் மான் சின்னத்தில் போட்டியிடும் சட்டத்தரணி வி. மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த மண் மாற்றத்துக்குத் தயாராகி விட்டது. கல்விமான்கள் , புத்தி மான்கள் ஆகியோரின் தெரிவு இந்த இளமான்களே.

இந்த மண்ணிலே இரண்டு தெரிவு தான் இருக்கிறது. ஒன்று ஏமாற்றம். மற்றதும் மாற்றம். எங்களை தவிர ஏனைய கட்சிகளில் 10 வருடங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளவர்கள் நிற்கின்றனர். அவர்களிடம் சென்று 10 வருடங்களில் நீங்கள் என்ன செய்தீர்கள் எனக் கேட்டால், அவர்களுக்கு சொல்ல எதுவும் இல்லை.

13ஆம் திருத்தம் ஊடாக எதனையும் பெற முடியாது. சமஷ்டி பொறிமுறையை உருவாக்கவேண்டும். அதற்கு புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்படவேண்டும். இதற்கான அழுத்தத்தை நாங்கள் கொடுப்போம். அவ்வாறான ஒரு யாப்பு வரமுதல் தற்போதுள்ள யாப்பில் உள்ளவற்றை நடைமுறைப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமையே - என்றார். (ச-20)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










# வடக்கு மீனவர் பிரச்சினை நிரந்தரத் தீர்வேவேண்டும்

## இந்தியாவிடம் ஜனாதிபதி வலியுறுத்து



கொழும்பு, நவ. 4

வடமாகாண கடல் பிரதேசத்தில் நிலவும் மீன்பிடிப் பிரச்சினைகள் தொடர்பில் மீனவ சமூகத்தின் நலன்களை பாதுகாப்பதில் தான் எப்போதும் அர்ப்பணிப்புடன் இருப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும், இலங்கைக்கான இந்தியத்தூதுவர் சந்தோஸ் ஜாவுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது மற்றும் இருநாட்டு மீனவ சமூகங்களின் தேவைகளைப் புரிந்து கொண்டு ஒத்துழைப்புத் திட்டத்தின் மூலம் நீண்ட கால தீர்வை எட்டுவதன் முக்கியத்துவம் குறித்து கலந்துரையாடப்பட்டது.

மேலும் இலங்கையில் மின்சக்தி மற்றும் வலுசக்தித் துறையின் மேம்பாடு மற்றும் டிஜிற்றல் மயமாக்கல் வேலைத் திட்டத்தின் வெற்றிக்கு இந்தியாவின் ஆதரவை எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வச்சந்நிதியில் கந்தசஷ்டி உற்சவம்

யாழ்ப்பாணம், நவ.4
வரலாற்றுச் சிறப்பு மிக்க தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் வருடாந்தக் கந்தசஷ்டி உற்சவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பமானது. தொடர்ந்து ஆறுநாட்கள் கந்தசஷ்டி உற்சவம் இடம்பெறவுள்ளது. (ரி-66)







# கந்தசஷ்டி உற்சவம்

யாழ்ப்பாணம், நவ.4
வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் குரோதி வருடக் கந்தசஷ்டி விரத உற்சவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பமானது. தொடர்ந்து நடைபெறவுள்ள காலை, மாலை உற்சவங்களில் இன்றுதிங்கட்கிழமை மாலை 7.45 மணிக்கு வேல்வாங்கும் உற்சவமும், 7 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப.3.30 மணிக்கு சூரசம்ஹாரத் திருவிழாவும், 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு தீர்த்தோற்சவமும், 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 7.30 மணிக்குதிருக்கல்யாண வைபவமும் இடம்பெறுமென மாவை ஆதீன கர்த்தா மகாராஜஸ்ரீ து.ஷ. இரத்தின சபாபதிக் குருக்கள் தெரிவித்துள்ளார். (ரி-66)



# சந்நிதியான் ஆச்சிரமத்தால் அடியவர்களுக்கு பழவகைகள்

யாழ்ப்பாணம், நவ.4
சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் கந்தசஷ்டி விரதம் அனுஷ்டிக்கும் அடியவர்களுக்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆச்சிரம முன்றலில் வைத்துப் பழவகைகள் கையளிக்கப்பட்டன. ஒவ்வொரு அடியவருக்கும் தலா ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பழ வகைகள் வழங்கப்பட்டன. கந்தசஷ்டி விரத காலப் பகுதியில் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் தொடர்ச்சியாகப் பழவகைகள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-66)

# மரித்த ஆன்மாக்களை நினைவுகூரும் நிகழ்வு

கொழும்பு, நவ.4
மன்னார் மாவட்டத்தில் மரித்த ஆன்மாக்களை நினைவு கூரும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை உணர்வுபூர்வமாக இடம்பெற்றது. மன்னார் பேசாலை கல்லறைத் தோட்டத்தில் புனித வெற்றி நாயகி ஆலயத்தின் பங்குத்தந்தை மற்றும் உதவிப் பங்குத் தந்தையர்களின் தலைமையில் இரங்கல் திருப்பலி மற்றும் மரித்த விசுவாசிகளின் கல்லறைகள் ஆசீர்வதித்து அர்சிக்கப்பட்டது. மேலும் மன்னார் மாவட்ட பகுதிகளில் உள்ள கத்தோலிக்க கல்லறைத் தோட்டங்களிலும் இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெற்றன. (ச)



# எருமை கடத்தல் முறியடிப்பு

வவுனியா, நவ.4
செட்டிகுளம் பகுதியில் இருந்து மாத்தறைக்கு லொறி ஒன்றில் கொண்டு செல்லப்பட்ட 12 எருமை மாடுகள் மீட்கப்பட்டுள்ளதுடன், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
வவுனியா மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் இந்தக் கைது இடம் பெற்றது. (ச)

# நல்லூரில் விசேட வழிபாடுகள்

யாழ்ப்பாணம், நவ. 4
கந்தசஷ்டி விரதம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பமாகிய நிலையில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றன. (ரி)



படங்கள் - ஐ.சிவசாந்தன்

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வழக்கமான காரியங்களிலும் கவனம் தேவை. ஒருவரையொருவர் அனுச ரித்துச் செல்வது நல்லது. பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்ச்சி அடைவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும்.

**மிதுனம்:** இன்று தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். சிலருக்கு சகோதர வகையில் எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். வாழ்க்கைத் துணை வழி உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**கடகம்:** உற்சாகமான நாள். சிலருக்குக் குடும்பத்துடன் குலதெய்வக் கோயிலுக்குச் சென்று பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் ஏற்படும்.

**சிம்மம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. திடீர் செலவுகள் ஏற்பட்டாலும், தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். முக்கியமான விஷயம் தொடர்பாக வாழ்க்கைத்துணையிடம் ஆலோசனை கேட்பீர்கள்.

**கன்னி:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. சிலருக்கு உறவினர் வீட்டு விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

**துலாம்:** இன்று புதிய முயற்சியைத் தவிர்க்கவும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தடை, தாமதம் ஏற்படக்கூடும். சகோதரர்கள் உதவி கேட்டு நச்சரிப்பார்கள். கொடுத்த கடனில் ஒரு பகுதி திரும்பக் கிடைக்கும்.

**விருச்சிகம் :** தேவையான பணம் கையில் இருப்பதால், செலவுகளை சமாளித்து விடுவீர்கள். வீட்டில் தொலைந்த பொருள் திரும்பக் கிடைக்கும். தேவையற்ற பிரச்னைகளைத் தவிர்க்கவும்.

**தனுசு:** இன்று எதிலும் பொறுமையாக இருப்பது நல்லது. திடீர் செலவுகளால் கடன் வாங்க நேரிடும். சிலருக்கு வாழ்க்கைத்துணையால் செலவுகள் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

**மகரம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வீர்கள். பிற்பகலுக்கு மேல் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** எதிர்பாராத பணவரவு உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும். உறவினர் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதர வகையில் சுபச்செலவுகள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பும் சிலருக்கு ஏற்படக்கூடும். பயணத்தின்போது கொண்டு செல்லும் பொருள்களை கவனமாகப் பார்த்துக் கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# தமிழர்களின் தீர்வுக்கு ஐ.ம. சக்தி பாடுபடும்!

## வேட்பாளர் உமாச்சந்திரபிரகாஸ் தெரிவிப்பு

கிளிநொச்சி, நவ.4

தேர்தல் காலத்தில் மாத்திரம் வாக்குறுதிகளை வழங்காது தேர்தலுக்குப் பின்னரும் உரிமை சார்ந்து அரசியல் தீர்வு விடயத்தில் நாம் முன்னெடுப்புகளை மேற்கொள்வோம்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ்.தேர்தல் மாவட்ட வேட்பாளர் உமாச்சந்திராபிரகாஸ் கிளிநொச்சியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தின் மக்களின் எதிர்பார்ப்பு அரசியல் தீர்வினூடாகக் கிடைக்கவேண்டும் என்பதே எமது நோக்கம்.

தேர்தல் கால வாக்குறுதி இல்லாமல் தேர்தலுக்கு பின்னரும் உரிமை சார்ந்து மற்றும் அரசியல் தீர்வு விடயத்தில்தற்போதைய அரசு முன்னெடுப்புகளை முன்னெடுக்கவேண்டும். இந்த விடயத்தை பலர் தனிப்பட்ட ரீதியில் உரிமை கோருகின்றனர். இதை யாருமே உரிமை கோரி அரசியல் சாயம் பூசவேண்டாம். 30 வருடப் போரால் பொருளாதார ரீதியில் பாதிப்படைந்துள்ளோம். பல பெண்கள் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் ஆகியுள்ளனர். எமது அரசாங்கம் மக்களுக்கு உரிமை சார்ந்த விடயத்தை முன்னெடுக்கும்- என்றார். (ச-113)



# சுழிபுரத்தில் கசிப்புடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், நவ.4

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம், வறுத்தோலைப் பகுதியில் ஒரு போத்தல் கசிப்புடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-27)

# வெற்றிலைக்கேணியில் மோ.சைக்கிள் திருட்டு!

யாழ்ப்பாணம், நவ.4

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணிப் பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மோட்டார் சைக்கிள் ஒன்று களவாடப்பட்டுள்ளது.

வீட்டின் அருகில் மோட்டார் சைக்கிள் நிறுத்திவைக்கப்பட்ட நிலையில் காலையில் எழுந்து உரிமையாளர் பார்த்தபோது அங்கு மோட்டார் சைக்கிளைக் காணவில்லை. அதனையடுத்து சம்பவம் தொடர்பில் உரிமையாளரால் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. மருதங்கேணிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-27)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனவரி மோசடியால் 10 கோடி ரூபா இழப்பு

கொழும்பு, நவ.4

**உள்ளூர்ச் சந்தைக்கு விடப்பட்ட 326 வாகனங்களுக்கு வரிச்சலுகை வழங்கியதன் மூலம் அரசாங்கத்துக்கு 10,38,03,200 ரூபா வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.**

சுங்கக் கிடங்கின் வாகன உதிரிப்பாகங்களை அசெம்பிள் செய்து தயாரிக்கப்படும் இந்த வாகனங்கள், கிடங்கிலிருந்து விடுவிக்கப்படும்போது, அவற்றை இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களாகக் கருதி, வரி கணக்கீடு செலுத்தப்படவேண்டும். உள்நாட்டில் 30 சதவீதத்துக்கும் குறைவான மதிப்பையும், உள்ளூரில் தயாரிக்கப்பட்ட உதிரிப்பாகங்களைப் பயன்படுத்தி, சந்தைக்கு விடப்பட்ட 326 வாகனங்களை இரண்டு நிறுவனங்களுக்கு வழங்கியதன் மூலம் அரசுக்கு இந்த வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த வாகனங்களுக்கு 35,04,32,000 ரூபா வரித் தொகை அறவிடப்பட வேண்டும். ஆனால் சுங்க விதிகள் மற்றும் விதிமுறைகள் எதுவாக இருந்தாலும் அமைச்சரின் பரிந்துரைகளை மாத்திரம் கருத்திற்கொண்டு வரித் தொகை 24,66,28,800 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வு அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## அரிசி இருப்பு கணக்கெடுப்பு

கொழும்பு, நவ.4

10 மாவட்டங்களில் உள்ள நெல் மற்றும் அரிசி இருப்பு குறித்த கணக்கெடுப்பு ஆரம்பமாகவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை அறிவித்துள்ளது.

4 மாவட்டங்களின் நெல் மற்றும் அரிசி கையிருப்பு தொடர்பான அறிக்கைகள் ஏற்கனவே அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தலைவர் ஹேமந்த சமரகோன் தெரிவித்தார். அடையாளம் காணப்பட்ட மாவட்டங்களில் உள்ள நெல் மற்றும் அரிசி இருப்புகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். (ச)





## கடலட்டையுடன் ஆறு பேர் கைது

மன்னார், நவ.4

மன்னார் கிழக்கு கடற்கரைப் பகுதியான அரிப்பு பண்டார வெளி கடற்பரப்பில் கடலட்டை பிடித்துக்கொண்டிருந்த 6 பேர் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையின் விளைவாக ஒரு டிங்கிப் படகு மற்றும் சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட 227 கடலட்டைகள் கைப்பற்றப்பட்டன. கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் சிலாவத்துறை அரிப்பு மற்றும் நானாட்டான் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. சந்தேகநபர்கள் சான்றுப்பொருள்களுடன் சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டனர். (ச-213)



## சுயேச்சைக்குழு- 14இன் தேர்தல் அலுவலகம் திறப்பு!

யாழ்ப்பாணம், நவ.4

மாம்பழம் சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சைக் குழு 14 இன் சாவகச்சேரி தொகுதிக்கான தேர்தல் அலுவலகம் நேற்று ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி நுணாவில் பகுதியை அண்மித்து ஏ-9 வீதியில் திறக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் குறித்த சுயேச்சைக்குழவின் முதன்மை வேட்பாளருமாகிய ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா உள்ளிட்ட வேட்பாளர்கள் கலந்துகொண்டனர். (ச-27)

## 22 பிடியாணைகள் சந்தேகநபர் கைது

கொழும்பு, நவ.4

கந்தானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கந்தேவத்த பிரதேசத்தில் பல்வேறு குற்றங்கள் தொடர்பில் நீதிமன்றங்களினால் 22 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்ட சந்தேக நபரொருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கந்தானை பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தானை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ச)



## ஜனநாயகத் தேசியக் கூட்டணி கடற்றொழிலாளருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், நவ.4

ஜனநாயகத் தேசியக் கூட்டணி யாழ்.மாவட்ட வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் கலந்துகொண்ட தேர்தல் பிரசாரக் கூட்டம் யாழ்.மாதகல் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதன்போது கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், தேவைகள் அடங்கிய கோரிக்கை அங்கஜன் இராமநாதனிடம் கையளிக்கப்பட்டது. (ச-27)




**இ**ன்னும் பத்து நாளில எலக்சன். அரசியல்வாதிமார் எல்லாரும் செட்டைகட்டின ஆக்கள் மாதிரி பறந்துகொண்டு பிரசாரம் எண்டு ஓடுப்பட்டுக்கொண்டு திரியினம். பகிடி என்னெண்டால் எலக்சன் கிட்ட முட்ட வந்தபிறகுதான் எங்கட ஆக்களுக்கு 'விஞ்ஞாபனம்' எண்ட ஒண்டை விடோணும், அதைச் சனத்திட்ட குடுக்கோணும் எண்ட நினைப்பே வந்திருக்கு. அப்ப இவ்வளவு நாளும் விஞ்ஞாபனமே இல்லாமல் என்னத்தைச் சொல்லி பிரசாரம் செய்தவை? எண்டு நீங்கள் கேக்கலாம். வெறுங்கையில முழம் போடத் தெரிஞ்ச கெட்டிக்காரரெல்லோ எங்கட அரசியல்வாதிமார். போன எலக்சனுக்கு என்னத்தைச் சொல்லி இருப்பினமோ அதைத்தான் இந்த முறையும் சனத்திட்டச் சொல்லியிருப்பினம். அதை மாதிரி போனமுறை விட்ட விஞ்ஞாபனத்தையே அங்க இஞ்ச கொஞ்சம் பவுடர் போட்டு மேக்கப் பண்ணிப்போட்டு , புது விஞ்ஞாபனம் எண்டு விட்டிருக்கினம். இந்த விஞ்ஞாபனம் விட்டதிலையும் வீட்டுக் கட்சியில ஒரு விண்ணானம் நடந்திருக்கு கண்டியளோ.

செல்வா கலையரங்கத்தில தான் இந்த விஞ்ஞாபனத்தை வெளியிடுறதெண்டு முடிவெடுத்திருந்தவை. ஆனால் விஞ்ஞாபனம் வெளியிடுறதெண்டால் அதுக்கு வீட்டுக்கட்சியின்ர தலைவரா இருக்கிற மாவையர்தான் தலைமை தாங்கி வெளியிடவேணும் எண்டு வேட்பாளர்களில ஒருசிலர் நிண்டிருக்கினம். அதை பதில் செயலாளரிட்டையும் சொல்லியிருக்கினம். அவரும் வேண்டா வெறுப்பா 'சரி அவரைக் கூப்பிடுவம்' எண்டு சொல்லியிருக்கிறார். பிறகு ' மாவையர் புரோக்கிராமுக்கு வருவார்' எண்டும் அவர் அறிவிச்சிருக்கிறார். அதால எல்லா வேட்பாளர்மாரும் வருவம் எண்டும் சொல்லியிருக்கினம். ஆனால் கடைசிநேரத்தில 'மாவை ஐயாவுக்கு வருத்தம், அதால வரமாட்டாராம்' எண்டு பதில் செயலாளர் ஒரு பட்டாசை தூக்கிப் போட்டிருக்கிறார். நிகழ்வுக்கு வந்துகொண்டிருந்த சில வேட்பாளர்மார் இதைக் கேட்டதும் 'அப்பிடியெண்டால் நாங்களும் வரேலை. மாவை ஐயா வந்தாத்தான் நாங்கள் வருவமெண்டு முதலே சொன்னம் தானே' எண்டு முரண்டு பிடிச்சிருக்கினம். பிறகு அவையே 'அவருக்கு வருத்தமெண்டதாலதானே அவர் வரேலை எண்டு சொல்லுறீங்கள். அப்பிடியெண்டால் அவரின்ர வீட்டை போவம். அங்க அவர் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைக்கட்டும்'எண்டு சொல்லிப்போட்டு அங்க வெளிக்கிட்டிருக்கினம். வேறவழியில்லாமல் அவை சொன்னபடியே பதில் செயலாளரும் ஓமெண்டிட்டு, மிச்ச வேட்பாளர்களையும் மாவையர் வீட்டுக்கு வரச்சொல்லிக் கூப்பிட்டிருக்கிறார். ஆனாலும் எல்லா வேட்பாளர் மாராலும் இப்பிடி பிளான் திடீரெண்டு மாறுபட்டதால போகமுடியேலையாம்.

அதுக்குப்பிறகு அங்க வந்த வேட்பாளர்களின்ர கையில விஞ்ஞாபனத்தை குடுத்து,அதை மாவையர் வெளியிட்டு வைச்சிருக்கிறார். முந்தினதை விட மாவையர் இப்ப நல்லா தளர்ந்து போட்டார் எண்டு அங்க போய்வந்த வேட்பாளர்மார் கவலையாச் சொல்லியிருக்கினம். ஒருவேளை தான் தலைவரா இருக்கிற கட்சி இப்பிடி சின்னாபின்னாமாகிறதைக் கண்டுதான் இப்பிடி அவருக்கு வருத்தமும், தளர்வுமோ தெரியேலை. ஆனாலும் தன்னை மதிச்சு, வீட்டுக்கே வந்து தன்ர கையால விஞ்ஞாபனத்தைக் கட்சிக்காரர் வெளியிட வைச்சது அவருக்கு கொஞ்சம் சந்தோசமாம்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பாதைகளுக்குள் புதைந்திருக்கும் அரசியல்

**போ**ர் முதலில் விழுங்குவது பெண்களையும், குழந்தைகளையும் தான். அதன் பின்னர் அது இலக்கு வைப்பது பாதைகளையே. பாதைகள் தான் ஒரு நிலத்தினதும், அந்த நிலத்தில் இருக்கும் மக்களினதும் உயிர்நாடி. அந்தப் பாதைகள் தான் அவர்களுக்கான உணவு, உடை ,மருந்து,ஆயுதம் என எல்லாவற்றையும் தருவிப்பதற்கான ஒரேயொரு மார்க்கம். எனவே பாதைகளை முடக்குவதன்மூலம், அந்த நிலத்துக்குரியவர்களை பணியவைத்தல் அல்லது அவர்களுடன் பேரம் பேசலை நிகழ்த்தமுடியும். கிட்டத்தட்ட முடக்கப்பட்ட பாதைகள் பணயக் கைதிகளுக்கு ஒப்பானவை. இதனால் பாதைகளை முடக்குவதற்கும், திறப்பதற்குமான யுத்தங்கள் அதிகமதிகம் நிகழ்ந்துள்ளன. எங்கள் தாயகத்தில் கூட,ஏ-9 பாதை இப்படி போரில் ஈடுபட்ட இரு தரப்பினராலும் பணயக்கைதியாக்கப்பட்டிருந்தது. அந்தப் பாதையை மூடியதிலும், திறந்ததிலும் பெரும் அரசியலும் புதைந்திருந்தது. ஆனால் ஏ-9 பாதை போர் முடிவுக்கு வந்தபின்னர் முற்றாகத்திறந்துவிடப்பட்டு விட்டது. ஏனெனில் அரசாங்கம் தன் எதிர்த்தரப்பான விடுதலைப்புலிகளை ஒழித்ததாலும், அந்த நிலத்து மக்களை நலன்புரி நிலையங்களுக்குள் அடைத்ததாலும் ஏ-9 பாதை அதன் அரசியல் பெறுமதியை இழந்திருந்தது. ஒரு வேளை ஏ-9 பாதையை மூடிவைத்திருந்தால் தமிழர்களின் உரிமைக்குரலை நசுக்கும் வாய்ப்பு இருக்குமெனில் கட்டாயம் அந்தப் பாதை இப்படித் திறக்கப்பட்டிருக்காது என்பதே உண்மை.

இப்போதும் ஒரு பாதை திறக்கப்பட்டிருக்கிறது. அச்சுவேலி - வயாவிளான் வீதியில் ஒரு கிலோமீற்றரை மக்கள் பாவனைக்காக ஒப்படைத்துவிட்டு, முழுவீதியையும் திறந்துவிட்டது போல கொண்டாடித் தீர்த்துக்கொண்டிருக்கிறது தேசிய மக்கள் சக்தி. ஆனால் அந்தப் பாதையினூடாக முழுமையாகப் போக்குவரத்துச் செய்யவேண்டுமாயின் இன்னும் ஒன்றரைக் கிலோமீற்றர் தூரத்தையும் படைத்தரப்பு விடுவிக்கவேண்டும். ஆனால் அது இப்போதைக்குச் சாத்தியமில்லை. இப்போது திறக்கப்பட்ட வீதிப்பகுதி அதன் அரசியல் பெறுமதியை இழந்துவிட்டதால், அதை வைத்திருப்பதால் எவ்வித இலாபமுமில்லை என்பதை படைத்தரப்பு சில மாதங்களுக்கு முன்னரே உணர்ந்துவிட்டது. அதனால் கடந்த அரசாங்கத்தின் காலத்திலேயே அதனைத் திறப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளும் ஆரம்பித்திருந்தன. எனவே எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும், குறித்த அச்சுவேலி-வயாவிளான் வீதியின் ஒருகிலோமீற்றர் நீளமான பகுதி விடுவிக்கப்படுவது நிச்சயமாகி இருந்தது. இதனை மோப்பம் பிடித்திருந்த சில அரசியல்வாதிகள் திடீர் ஞானோதயம் வந்தவர்கள் போல, அச்சுவேலி- வயாவிளான் வீதியைத் திறக்குமாறு அநுர அரசாங்கத்துக்கு கைவலிக்க கடிதம் எழுதினர். அப்போதுதானே தாங்கள் கடிதம் எழுதியதால் தான் அந்தப் பாதை திறந்தது என்று கதையளந்து, வாக்குகளைச் சுவீகரிக்கமுடியும். உண்மையாகவே இவர்கள் சொல்லித்தான் அல்லது இவர்களின் கடிதத்தால் தான் அந்தப் பாதையின் ஒருகிலோ மீற்றர் திறந்தது என்றால், ஏன் மிகுதிப் பாதையையும் திறக்கச் செய்ய இவர்களால் முடியவில்லை?

உண்மையில் லாபமற்ற கைவிடப்பட்ட இந்தப் பாதையிலும் ஓர் அரசியல் ஆதாயத்தை அடைய தேசிய மக்கள் சக்தி நினைக்கிறது. ஜனாதிபதித் தேர்தலின் போது வடக்கில் அந்தக் கட்சிக்கு வீசிய ஆதரவு அலை இப்போது அடங்கிவிட்டது. எனவே ஏதாவது மாயமோ மந்திரமோ செய்தால்தான் மீண்டும் தமக்கான ஆதரவு அலையை அந்தக் கட்சியால் இங்கு உண்டாக்கமுடியும். எனவேதான் சிலபல மாதங்களுக்கு முன்னரே விடுவிக்கத் தயாராக இருந்த பாதையின் ஒரு பகுதியை விடுவித்து, 'இதுமட்டுல்ல இன்னும் பல மாற்றங்களை எதிர்பாருங்கள்' என்று அந்தக் கட்சி வடபகுதி வாக்காளர்களுக்குத் தூண்டில் போட்டிருக்கிறது. அந்தத் தூண்டிலில் தமிழ் மக்கள் சிக்குவார்களா? தப்புவார்களா ? என்பது இன்னும் பத்து நாள்களில் தெரிந்துவிடும்.



# வன்முறையற்ற தேர்தல் சகலரும் உறுதிசெய்க!

## கபே அமைப்பு கோரிக்கை

**யாழ்ப்பாணம், நவ.4**

**ஜனநாயகத்தை மதிக்கின்ற வன்முறைகள் அற்ற தேர்தலுக்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீன் தெரிவித்தார்.**

'அமைதியான தேர்தலுக்காக ஒன்றுபடுவோம்' எனும் தொனிப்பொருளில் புதிய வாக்காளர்களுக்கு தெளிவூட்டும் நிகழ்வு வவுனியாவிலுள்ள விடுதியில் நேற்று நடைபெற்றது.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த 15வருடங்களுக்கு முன்னர் இருந்த தேர்தல் நிலவரமும் தற்போது இருக்கின்ற நிலவரத்தினையும் பார்க்கும் போது ஜனநாயகத்தை மதிக்கின்ற வன்முறைகள் அற்ற ஒரு சமாதானமான தேர்தலுக்காக அனைவரும் ஒன்றிணையும் ஒரு கலாசாரம் உருவாக்கப்பட்டுக்கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

இதுவரை பெரிய வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகள் எவையும் பதியப்படவில்லை. எனவே அனைத்து அரசியல்கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தக் கூடியவர்களை வரவழைத்து அமைதியான தேர்தலுக்காக ஒத்துழைப்போம் - என்றார். (ச-110)

## 'அஸ்வெசும' முறைகேடு கண்டறிய குழு நியமனம்

யாழ்ப்பாணம், நவ.4

'அஸ்வெசும' கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கையின் போது அநீதி இழைக்கப்பட்ட நபர்களை கண்டறிவதற்கும் முறையான விசாரணை நடத்த சமூக பாதுகாப்பு மற்றும் வெகுஜன ஊடக அமைச்சினால் பத்து பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சமூகப் பாதுகாப்பு மற்றும் ஊடக அமைச்சின் அறிக்கையின்படி, குழுவின் உத்தியோகபூர்வ உறுப்பினர்களில் சமூக சேவையாளர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் உள்ளனர். (ச)

## முட்டை விலை உயரும்

கொழும்பு, நவ.4

இம்மாத நடுப்பகுதியில் மீண்டும் முட்டையின் விலையை உயர்த்த கோழிப் பண்ணை உரிமையாளர்கள் திட்டமிட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. கோழி தீவனத்தின் விலை உயர்வு மற்றும் முட்டை விலை குறைப்பினால் தங்களின் வருமானம் சரிந்துள்ளதாக சிறு மற்றும் நடுத்தர கோழிப்பண்ணை உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். (ச)

## ஏலத்தில் திறைசேரி உண்டியல்கள்

175,000 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.எதிர்வரும் 6ஆம் திகதி இந்த திறைசேரி உண்டியல்கள் ஏல விற்பனையினூடாக வழங்கப் படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. (ச)



## தட்டம்மை தடுப்பூசி இன்று முதல்

வவுனியா, நவ.4

தட்டம்மை தடுப்பூசி வழங்கும் விசேட வேலைத்திட்டமொன்று இன்று முதல் எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் முன்னெடுக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. நாடு முழுவதும் தெரிவு செய்யப்பட்ட 12 மாவட்டங்களில் இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. (ச)

**நாளை**

05.11.2024

செவ்வாய்க்கிழமை - ஐப்பசி - 19

சுபநேரம் : 10.34 - 12.04

ராகுகாலம் : 03.04 - 04.34

**நாளொரு நல்வார்த்தை**

தன்னால் அந்த மரத்தின் நிழலில் ஒருபோதும் உட்காரமுடியாது என்று தெரிந்தும் மரங்களை நாட்டும் முதியவர்களைக் கொண்ட சமூகம் மிகப் பெரியளவில் வளர்ச்சியடையும்.

- கிரேக்கப்பழமொழி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காணி, பொலிஸ் அதிகாரம் மாகாணத்துக்கு பகிருங்கள்

## பவ்ரல் அமைப்பிடம் சித்தார்த்தன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், நவ.4

13 ஆவது சீர்திருத்தமானது முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு மாகாணசபைத் தேர்தலானது நடத்தப்படவேண்டும். அதில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாணத்துக்கு வழங்கப்படவேண்டும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

அரச சார்பற்ற நிறுவனமான பவ்ரல் அமைப்பினருடன் நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார். வடக்கில் வீதிகளையும், காணிகளையும் விடுவிப்பதாக கூறுகின்றனர். ஆனால் சில பகுதிகள் மாத்திரமே விடுவிக்கப்படுகின்றன. பெரும்பாலான பகுதிகள் விடுவிக்கப்படாமலுள்ளன. அந்தப் பகுதிகளும் விடுவிக்கப்படவேண்டும்.

தொல்லியல் திணைக்களமானது மக்களது காணிகளை அபகரிக்கும் ஒரு நிலையிலேயே காணப்படுகிறது. அதனால் தமிழ் - பௌத்த சின்னங்கள் கூட அழிவடையக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுகின்றது என்றும் சித்தார்த்தன் பவ்ரல் அமைப்பினரிடம் சுட்டிக்காட்டினார். (ச-27)



# இளையோரின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார் சந்திரசேகரன்

யாழ்ப்பாணம், நவ.4

தென்பகுதியில் இருந்து வருகை தந்த சகோதர மொழி பேசும் இளைஞர்களுக்கும் தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகரனுக்கும் இடையிலான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் - அரியாலையில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது 13ஆவது சீர்திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் குறித்தும், அதனை நிறைவேற்றுவதில் உள்ள இடர்பாடுகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டன. எதிர்வரும் காலங்களில் இளைஞர்கள் முன்வைக்கின்ற கருத்துகளையும் உள்வாங்கி, பின்தங்கிய பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களின் பிரச்சினைகள் குறித்துப் பேசி அவர்களது பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான கவனத்தை செலுத்துவோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-27)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவில்லும்

தோற்றம்
19.07.1945



மறைவு
07.10.2024

கடந்த 07.10.2024 திங்கட்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

### தங்கராசா திலகவதி

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளைமறுதினம் (06.11.2024) புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

எமது குடும்பத்தலைவி உடல் நலக்குறைவு காரணமாக வீட்டில் இருந்தவேளை உதவிய அனைத்து உற்றார், உறவினர்கள், அயலவர்கள் மற்றும் நண்பர்களுக்கும், நோயுற்று மருத்துவமனையில் இருந்தவேளை சிகிச்சையளித்த வைத்தியர்கள் மற்றும் அனைவருக்கும், எமது குடும்பத்தலைவியின் மரணச்செய்தி கேட்டு துயருற்ற வேளையில் நேரில் வந்தும், தொலைபேசி ஊடாகவும் மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது குடும்பம் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர் வீதி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்

# ஆளுமைமிக்க பெண்களை தமிழரசு நீக்கியது அபத்தம்

## வேட்பாளர் மிதிலைச்செல்வி சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ.4

ஆளுமையற்ற பெண்களை தமிழரசுக் கட்சி நீக்கிவிட்டு காடு மேடு அலைந்து திரிந்து பெண் வேட்பாளர்களை நியமித்தமை முட்டாள்தனமான செயற்பாடாகும். - இவ்வாறு யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தமிழ் மக்கள் கூட்டணியின் பெண் வேட்பாளர் மிதிலைச் செல்வி ஸ்ரீ பத்மநாதன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழரசுக் கட்சியினர் நல்லாட்சி அரசாங்கத்தில் அரசாங்கத்தைக் காப்பாற்றுவதற்காக ஜெனிவாவில் கால அவகாசத்தைப் பெற்றுக் கொடுத்தனர். சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கு - கிழக்கில் ஆயிரம் விகாரைத் திட்டத்துக்கு ஆதரவு வழங்கி அவருக்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களைக் கோரினர். இதுதொடர்பில் மக்கள் சிந்தித்து வாக்களிக்கவேண்டும்- என்றார். (ச-27)

# எழுதுமட்டுவாழ் தெற்கு வீதியை புனரமையுங்கள்

எழுதுமட்டுவாழ் தெற்கு பழைய பாடசாலை வீதியை மழை காலத்துக்கு முன் புனரமைத்துத் தருமாறு சாவகச்சேரி பிரதேசசபையிடம் அந்தப் பகுதி மக்கள் கடிதமொன்றை கையளித்துள்ளனர். 2000 ஆம் ஆண்டு முதல் இந்த வீதி புனரமைப்புச் செய்யப்படவில்லை. இதனால் வீதியில் பெரிய குழிகள் ஏற்பட்டு வெள்ளம் நிறைந்து காணப்படுகின்றது. இதனால் வீதியால் பயணிக்க முடியாத நிலையேற்பட்டுள்ளது. இந்த வீதி முகமாலை வீதியுடன் இணைவதால் கனரக வாகனங்கள், மோட்டார் வாகனங்கள், பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பல தரப்பினரினதும் பாவனைக்குரிய வீதியாக உள்ளது. எனவே வீதியின் நிலைமையைக் கருத்திற்கொண்டு வீதியைப் புனரமைத்துத் தர அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-159)

# மரண அறிவித்தல்

## நடராஜா மகாதேவன்



தோற்றம்
02.06.1941

மறைவு
01.11.2024

யாழ். அத்தியடியைப் பிறப்பிடமாகவும், ஏழாலை மேற்கு, அவுஸ்திரேலியா சிட்னி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா மகாதேவன் அவர்கள் கடந்த (01.11.2024) வெள்ளிக் கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை நடராஜா - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னம்பலம் சீனித்தம்பி - சிவபுரம் தம்பதிகளின் அன்பு மருமகனும், லோகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், மகிந்தன், தர்ஷன், சுஜீர்த்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும், தக்ஷயாணி, சுகன்னியா, சதீஷ்கரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, இராஜலிங்கம், கமலேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, சற்குணேஸ்வரி, நிர்மலேஸ்வரி, காலஞ்சென்ற பத்மநேசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு, கனகசபை, இராசதுரை, சுப்பிரமணியம், சபாரட்ணம், பொன்னம்பலம் மற்றும் மகேஸ்வரி, சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், மகிபனா, மகிஜனன், தர்னேஷ், தர்லேஷ், தர்னியா, சிராஷன், சிரோஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2024) திங்கட் கிழமை Macquarie Park Cemetery and Crematorium Cnr Delhi Rd, Plassey Rd, Macquarie Park NSW 2113, Australia என்னும் இடத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS/29211) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனங்களைக் கண்டறிய களமிறங்கும் பொலிஸார்




**கொழும்பு, நவ. 4**

**கடந்த அரசாங்கத்தின் சில அரசியல்வாதிகள் மற்றும் அரசு தொடர்பான உயரதிகாரிகள் பயன்படுத்திய பதிவு செய்யப்படாத வாகனங்களைக் கண்டறிய விரிவான கூட்டு நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது.**

பொலிஸ், சுங்கம் மற்றும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் ஆகியவற்றின் கீழ் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

அவ்வாறான வாகனங்கள் தொடர்பில் இதுவரை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களை அடிப்படையாக வைத்தே இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது.

சுங்கவரி செலுத்தாமல் சட்டவிரோதமாக ஒருங்கமைக்கப்பட்ட வாகனங்கள் மற்றும், சட்டவிரோத உதிரிப்பாக இறக்குமதி போன்றவற்றை கண்டறிய இதன்முலம் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அதன்படி, இதுபோன்ற நூற்றுக்கும் மேற்பட்ட வாகனங்கள் முன்னாள் உயரதிகாரிகளின் வசம் இன்னும் இருப்பதாக பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

வாகனங்களை ஒப்படைக்காமல் வெவ்வேறு இடங்களில் மறைத்து வைத்து விட்டுச் சென்றமை தொடர்பிலும் பல முறைபாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன

அரச வாகனங்கள் மற்றும் சொத்துகளை துஷ்பிரயோகம் செய்தல் மற்றும் மறைத்தல் தொடர்பிலான எந்தவொரு தகவல்களையும் உடனடியாக பொலிஸ் தலைமையகத்துக்கு அறிவிக்குமாறும் பொலிஸ் தலைமையகம் கேட்டுக்கொண்டுள்ளது. (ச)




*மாமனிதர் ரவிராஜின் சேவைகளையும், எதிர்காலத்தில் தான் முன்னெடுக்கவுள்ள திட்டங்கள் தொடர்பிலும், மாமனிதர் ரவிராஜின் மனைவியும் யாழ்.தேர்தல் மாவட்ட ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளருமான சசிகலா ரவிராஜ் 'மாமனிதம்' எனும் பத்திரிகையை யாழ்.ஊடக அமையத்தில் வெளியிட்டு வைத்தார். (ச -20)*



# ஓட்டோ தீக்கிரை இளைஞர் கைது

யாழ்ப்பாணம், நவ. 4

பருத்தித்துறை-தும்பளைப் பகுதியில் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டி ஒன்று தீவைத்து எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவர் பருத்தித்துறை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தீபாவளி தினத்தன்று பருத்தித்துறை, தும்பளை 4 ஆம் குறுக்குத் தெரு பகுதியில் இருவருக்கு இடையில் ஏற்பட்ட மோதல் கைகலப்பில் முடிந்தது. மறுநாள் வெள்ளிக்கிழமை அதிகாலை குறித்த பகுதியில் வீட்டில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டிக்கு தீவைத்து எரிக்கப்பட்டது. இதன் போது முச்சக்கரவண்டி முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸால் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டதை அடுத்து சந்தேகத்தின் பேரில் 18 வயது இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-100)


# மரண அறிவித்தல்

## திருமதி சிவலிங்கம் யோகராணி



தோற்றம் 11.05.1952

மறைவு 27.10.2024

குருக்கள் வீதி, அச்சுவேலியை பிறப்பிடமாகவும் தற்போது பின்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவலிங்கம் யோகராணி அவர்கள் 27.10.2024 அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை பொன்னு தம்பதிகளின் இளையமகளும் காலஞ்சென்ற பொன்னர் பொன்னி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவலிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும், பூமலர் (அமரர்), சுப்பிரமணியம், இராசமலர் (ஓய்வுநிலை அதிபர் கிளி/ கனகாம்பிகைகுளம் அ.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான குமரேசு, A.V.K மாணிக்கம், தங்கமலர், மகேந்திரலிங்கம் மற்றும் சற்குணவதி, சந்திராதேவி, செல்வராணி, வசந்தகுமாரி ஆகியோரின் மைத்துனியும் சுஜீவன், சுனிதா, ரமணன், நீரஜா ஆகியோரின் அன்புத்தாயாரும், நிவேதா, தனஞ்செயன், தமயந்தி, பிரதீபன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அபிஷன், அபிராமி, விவியா, அலெக், அகவன், பிரவீன் நிதுஷன், ஆதேஷ், அர்த்தனா, அக்சனா, அதிஷ்ரா ஆகியோரின் அன்பு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.11.2024) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியிலிருந்து 12.30 வரை Honkanummen Kappeli,Vanha Porvoontie 225. Vantaa நடைபெற்று 12.30 மணிக்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்பட்டு 13.30 மணியளவில் HIETANIEMEN KREMATORIO, Hietaniemenkatu27, Helsinki. தகனம் செய்யப்படும்.

அதே நாள் 05.11.2024 அன்னாரின் அச்சுவேலி இல்லத்தில் இறுதி அஞ்சலி நிகழ்வு (இலங்கை நேரம் நண்பகல் 12.00) நேரலையில் ஒளிபரப்பு செய்யப்படும்.

இத்தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
சகோதரி (தேவி ரீச்சர்)
077 280 4787

HCR 43597 P 1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிக்கட்டப் பரப்புரை முழுவீச்சில் கட்சிகள்

**யாழ்ப்பாணம், நவ.4**

**நாடாளுமன்றத் தேர்தலுக்குரிய பிரசாரங்களை முன்னெடுப்பதற்கு இன்னும் 7 நாள்களே எஞ்சியுள்ள நிலையில், இறுதிக்கட்ட பிரசார நடவடிக்கைகள் தற்போது கட்சிகளால் முழுவீச்சு டன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.**



எனினும், ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் இருந்ததுபோல அரசியல் களம் சூடுபிடிக்கவில்லை. நாட்டின் பல பகுதிகளில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலையும் பிரசாரப் பணிகளுக்கு பெரும் இடையூறாக அமைந்துள்ளது. எதிர்வரும் 11ஆம் திகதி நள்ளிரவுடன் பிரசார நடவடிக்கைகள் முடிவடையவுள்ளன. இந்தநிலையில் இன்று முதல் பிரதான கட்சிகள் சூறாவளிப் பிரசாரத்தை ஆரம்பிக்கவுள்ளன.

அதேவேளை தேர்தல் பாதுகாப்பு பணிகளுக்கென 75 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ளனர். தேவையேற்படின் இராணுவத்தின் உதவியையும் பெறுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச-44)

# 10 வருடங்களில் வீட்டுக்கொரு கார்

## தே.ம.சக்தி தெரிவிப்பு

கொழும்பு, நவ.4

அடுத்த 10 வருடங்களில் குடும்பமொன்று கார் ஒன்றுக்கான உரித்தைக் கொண்டிருக்கும் வகையில் பொருளாதாரம் உயர்த்தப்படும் என்று தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் நளின் ஹேவகே தெரிவித்துள்ளார்.

சிறந்தவொரு நாட்டை உருவாக்குகின்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். மக்களுக்கான சிறந்த வாழ்க்கைத் தரம் உருவாக்கப்படவேண்டும்.

வாழ்நாள் பூராகவும் பணத்தைச் சேர்த்தால் கூட குடும்பமொன்றால் கார் ஒன்றைக் கொள்வனவு செய்யமுடியாத நிலைமையே உள்ளது. காரணம், கடந்த காலத்தில் நாட்டை ஆட்சி செய்த ஊழல், மோசடிகள் நிறைந்த ஆட்சியாளர்கள் தான். அவர்கள் தமது மோசடிகளை மறைப்பதற்காக இறக்குமதி வரிவீதத்தை அதிகரித்துள்ளார்கள்.

எனவே சாதாரண மக்களும் வாகன உரிமையாளர்களாக மாற்றும் நிலைமையை அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் நாம் உருவாக்குவோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)


# INVITATION FOR BIDS TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.

| | Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate BOQ of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Construction of lift room & Installation of lift machine at NTS lecture Hall Building. | 5000.00 | 376,000.00 | 91 | 18.81 | C6 |
| 2. | Construction of lift room &Installation of lift machine at NICU Building. | 5000.00 | 325,000.00 | 91 | 16.23 | C6 |

1. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
3. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
4. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 05.11.2024 up to 20.11.2024 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
5. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 21.11.2024, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.
6. Pre-Bid Meeting will be held on 14.11.2024 (Tuesday) at 11:00 am, at Director Office, Teaching Hospital Jaffna.

**Director (Chairman),**
**Regional Procurement Committee,**
**Teaching Hospital, Jaffna.**
**30.10.2024.**


# ஊடக சுதந்திரத்தை பறிக்கக்கூடாது

## சஜித் சுட்டிக்காட்டு

ஊடகங்களுக்கு ஆலோசனை வழங்குவதையும் அடக்குவதையும் நிறுத்துமாறு ஜனாதிபதியிடம் கூற விரும்புகி றோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளராக அநுரகுமார திஸாநாயக்க இருந்தபோது ஊடகங்கள் பற்றிப் பேசவில்லை, ஊடக சுதந்திரம், உரிமைகள் மற்றும் பாதுகாப்புப் பற்றி பேசினார். ஆனால் இப்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஊடகங்களுக்கு ஆலோசனை வழங்க முயற்சிக்கிறார்.

ஊடக சுதந்திரம் எப்படி இருக்கவேண்டும் என்பது பற்றி நாட்டின் ஊடகங்கள் ஜனாதிபதியிடமோ அல்லது எந்த அரசியல்வாதியிடமிருந்தும் ஆலோசனை பெறத் தேவையில்லை. ஒரு ஜனநாயக நாட்டின் தூணாக இருக்கும் ஊடக சுதந்திரத்தை நாம் பாதுகாக்கவேண்டும். ஊடக நெறிமுறைகள் கடைப்பிடிக்கப்படவேண்டும் மற்றும் பாதுகாக்கப்படவேண்டும்,

ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்கு ஜனாதிபதியோ அல்லது அரசாங்கமோ ஆலோசனை வழங்குவது அல்லது சட்டங்களைக் கொண்டுவருவது ஊடக சுதந்திரத்துக்கும் ஜனநாயகத்துக்கும் ஆபத்தானது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)


பாராளுமன்ற பொதுத் தேர்தல் -2024
(யாழ் - கிளிநொச்சி மாவட்டம்)




| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | X | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர்களுக்கு சலுகைகள் 'கட்'

கொழும்பு, நவ. 4

பொதுத் தேர்தலின் பின்னர் அமைக்கப்படும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் குறைக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

புதிய அமைச்சரவையில் 25க்கும் குறைவான அமைச்சர்களே செயற்படுவார்கள். இதுவரை காலமும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களுக்கு கொழும்பில் அரசாங்க வீடுகள் வழங்கப்பட்டு வருவது வழமை. எனினும் அடுத்து வரும் அரசாங்கத்தில் அந்தச் சலுகைகள் வழங்கப்படமாட்டாது. அதுமட்டுமன்றி அமைச்சர்களை அரச ஊழியர்களாக மாற்றும் நோக்கில் அவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளும் பெருமளவில் குறைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

## ரணிலின் பாதையிலே வண்டி ஓடுகிறார் அநுர

### நாமல் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 4

ஆட்சிக்கு வந்தவுடன் சர்வதேச நாணயநிதியத்தின் செயற்றிட்டத்தை மறுசீரமைப்பதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதாரக்கொள்கையை எவ்வித மாற்றமுமில்லாமல் தொடர்கிறார்.

-இவ்வாறு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் உரையாற்றுகையில் பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க 1994 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆட்சியில் இருந்த அனைத்து அரசாங்கங்களையும் விமர்சித்தார். ஆகவே இம்முறை அவர் அரசாங்கத்தை நிர்வகிக்கட்டும். அப்போது சொல்வது இலகு செய்வது கடினம் என்பதை அறிவார்.

நடுத்தர மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு எவ்வித நடவடிக்கைகளையும் ஜனாதிபதி எடுக்கவில்லை. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதாரக் கொள்கையையே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னெடுக்கிறார்.

தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கி வாக்குறுதிகளுக்கு அப்பாற்பட்ட வகையில் தான் ஜனாதிபதி செயற்படுகிறார்- என்றார். (ச-இ)

## உணவு ஒவ்வாமை 13 மாணவர்கள் மருத்துவமனையில்

கொழும்பு, நவ. 4

கேகாலையிலுள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 13 மாணவர்கள் திடீர் சுகவீனமுற்று அரநாயக்க மாவட்ட மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சேர்க்கப்பட்டுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வாராந்தம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பாடசாலையில் உள்ள மாணவர்களினது பெற்றோரால் உணவு தயாரிக்கப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்படுவது வழக்கம்.

அன்றையதினம் தயாரிக்கப்பட்ட உணவை உட்கொண்ட பின்னரே இந்த மாணவர்கள் சுகவீனமுற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## பன்றிப் பண்ணையாளர் பதிவுகளை மேற்கொள்க

கொழும்பு, நவ. 4

நாட்டில் உள்ள அனைத்து பன்றிப் பண்ணைகளின் உரிமையாளர்களும் அருகில் உள்ள கால்நடை அலுவலகத்துக்குச் சென்று தங்களது பன்றிப் பண்ணைகள் தொடர்பில் தகவல்களை வழங்கி பதிவு செய்யுமாறு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆபிரிக்க பன்றிக் காய்ச்சலால் நாட்டின் பன்றிப் பண்ணைகளில் உள்ள பன்றிகளும் பாதிக்கப்பட்டதை தொடர்ந்து இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பன்றிக் காய்ச்சல் பாதிப்பு மேல், ஊவா, வட மற்றும் வடமேல் மாகாணங்களில் ஏற்பட்டுள்ளதாக மேல் மாகாண கால்நடை உற்பத்திமற்றும் சுகாதாரத்திணைக்களத்தின் பணிப்பாளர் கே.கே. சரத் தெரிவித்துள்ளார். (ச)



## லொஹானை பார்க்க சிறை சென்ற மஹிந்த

கொழும்பு, நவ. 4

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மற்றும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம ஆகியோர் வெலிக்கடை சிறைச்சாலைக்கு சென்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் உடல்நலம் குறித்து விசாரித்துள்ளனர்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் மனைவியின் மிரிஹான வீட்டில் சொகுசுக் கார் ஒன்று பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டார்.

அவரை எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்த நிலையில் மருத்துவத் தேவைகளை முன்வைத்து பெறப்பட்ட உத்தரவின் மூலம் சிறைச்சாலை மருத்துவமனையில் லொஹான் ரத்வத்த சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## சிறுநீரக, நீரிழிவு ஊசிக்குத் தட்டுப்பாடு

கொழும்பு, நவ. 4

சிறுநீரக நோய், கட்டுப்பாடற்ற நீரிழிவு மற்றும் கடுமையான நீரிழப்பு போன்ற நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் சிக்கல்களைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படும் சோடியம் பைகார்பனேட் ஊசிகளுக்குத் தட்டுப்பாடு இருப்பதாக சுகாதார அமைச்சகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

தடுப்பூசிகள் தட்டுப்பாடு காரணமாக, தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ள நோயாளிகளுக்கும், உடலுறுப்பு சத்திரசிகிச்சை செய்து கொள்ளும் நோயாளிகளுக்கும் சிகிச்சை அளிப்பதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

சோடியம் பைகார்பனேட் தடுப்பூசியை உள்நாட்டில் தயாரிப்பதற்கு தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையத்திடம் அனுமதி கோரி ஒரு குறிப்பிட்ட நிறுவனம் சமர்ப்பித்த விண்ணப்பத்துக்கு ஒப்புதல் அளிக்க இரண்டு ஆண்டுகளானதே சோடியம் பைகார்பனேட் தடுப்பூசி பற்றாக்குறைக்கு பிரதான காரணம் என்று கூறப்பட்டுள்ளது.

எனினும், அன்றாடத் தேவைக்கு பயன்படும் மருந்து அல்ல. ஆனால் இக்கட்டான சூழ்நிலைகளின் போது, அது அவசியமாகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## வர்த்தக வாய்ப்புகளுக்கு கனடாவுக்குப் பயணம்

கொழும்பு, நவ. 4

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் இலங்கை கனேடிய வணிகப்பேரவை உறுப்பினர்கள் கனடாவுக்கு 9 நாள்கள் உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு, இருதரப்பு நல்லுறவை வலுப்படுத்தல், இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் விரிவுபடுத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் அந்நாட்டுப் பிரதிநிதிகளுடன் வெற்றிகரமான பேச்சுகளை முன்னெடுத்துள்ளனர்.

இலங்கை - கனடாவுக்கு இடையிலானவர்த்தகத்தொடர்புகளை வலுப்படுத்துவதை நோக்காகக்கொண்டு இந்தப் பயணம் அமைந்துள்ளது.

இலங்கை கனேடிய வணிகப்



பேரவையின் தலைவர் பிரியந்த சந்திரசேகரவினால் வழிநடத்தப்பட்ட இந்தக் குழுவினர் கனடாவின் வணிகத்துறை தலைவர்கள், அரசாங்கப்பிரதிநிதிகள், கல்வியியல் நிலையங்களின் அதிகாரிகள், வர்த்தகக் கட்டமைப்புகளின் பிரதிநிதி கள் உள்ளடங்கலாகப் பல்வேறு தரப்பினரைச் சந்தித்து இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பில் பரந்துபட்ட கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளனர். (ச)

## ஏலக்காயுடன் ஒருவர் கைது



கொழும்பு, நவ. 4

கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்தில் நபர் ஒருவர் விமான நிலைய பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

டுபாயில் இருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட ஒரு தொகுதி ஏலக்காயுடன் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 76 கிலோ 300 கிராம் ஏலக்காய் மற்றும் 8 கையடக்கத் தொலைபேசிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவசிவ

# சிவப்பேறு குறித்த செய்தி

சிவபூமியில்

02 • 06 • 1941



சிவபுரத்தில்

01 • 11 • 2024

## சிவத்திரு. நடராஜா மகாதேவன்

யாழ்ப்பாணம் அத்தியடியைப் பிறப்பிடமாகவும், ஏழாலை மேற்கு, அவுஸ்திரேலியா சிட்னி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சிவத்திரு. நடராஜா மகாதேவன் அவர்கள், 01-11-2024 வெள்ளிக்கிழமை அன்று சிவப்பரம்பொருளின் பாதங்களைச் சென்றடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை நடராஜா, நடராஜா இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னம்பலம் சீனித்தம்பி, சீனித்தம்பி சிவபுரம் தம்பதிகளின் அன்பு மருமகனும், லோகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், மகிந்தன், தர்ஷன், சுஜீர்த்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும், தக்ஷயாணி, சுகன்னியா, சதீஷ்கரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

**அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல சிவப்பரம்பொருளை அடைந்து மீண்டும் பிறப்பில்லா பேரின்பப் பெருவாழ்வினை பெற்றிட வேண்டி, எல்லாம் வல்ல தென்னாடுடைய சிவனிடம் விண்ணப்பம் வைக்கின்றோம்.**

**திருச்சிற்றம்பலம்**

போற்றி! ஓம் நமச்சிவாய! புயங்கனே, மயங்குகின்றேன்
போற்றி! ஓம் நமச்சிவாய! புகல் இடம் பிறிது ஒன்று இல்லை
போற்றி! ஓம் நமச்சிவாய! புறம் எனைப் போக்கல், கண்டாய்
போற்றி! ஓம் நமச்சிவாய! சய! சய! போற்றி! போற்றி! - **காருண்யத்து இரங்கல்**

**திருச்சிற்றம்பலம்**

**திருச்சிற்றம்பலம்**

முத்தி நெறி அறியாத மூர்க்கரொடும் முயல்வேனை,
பத்தி நெறி அறிவித்து, பழ வினைகள் பாறும்வண்ணம்,
சித்த மலம் அறுவித்து, சிவம் ஆக்கி, எனை ஆண்ட
அத்தன் எனக்கு அருளிய ஆறு, ஆர் பெறுவார்? அச்சோவே! -**அச்சோப்பதிகம்**

**திருச்சிற்றம்பலம்**

**இங்ஙனம்**
**சிவத்திரு. சுப்பிரமணியம் சுபதாசன் மற்றும்**
**திருமதி. சித்திரா சுபதாசன் குடும்பத்தினர்**

(CS/29234) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாண்டியன்குளம் / துணுக்காய் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம். குளக்கட்டு, வவுனிக்குளம்.

### பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பம் கோரல்

பாண்டியன்குளம். துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் பாண்டியன்குளம் / துணுக்காய் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தில் வெற்றிடமாக கீழ்வரும் பதவிகளுக்கான தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு தங்களது சுயவிபரம். பிறப்புச்சான்றிதழ். கல்வித்தகைமைச் சான்றிதழ்கள். சேவைத்தகமைச் சான்றிதழ்கள் ஆகியவற்றின் நிழற்பிரதியுடன் விண்ணப்பத்தினை **தலைவர். பாண்டியன்குளம் / துணுக்காய் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம்** எனும் முகவரிக்கு 2024.11.23ம் திகதி சனிக்கிழமை 12.00 மணிக்கு முன்னராக நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

**01. பதவி - கிளை முகாமையாளர்**

பதவியின் தன்மை :- நிரந்தரம்
வெற்றிட எண்ணிக்கை :- 03
சம்பள குறியீட்டு இலக்கம் :- 208/13
சம்பள அளவுத்திட்டம் :- (04/2018ன் படி)
16365 – 140x10 – 150x10 - 19265

**தகைமைகள் :-** அ) கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./

கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்./

**அல்லது**

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி./ க.பொ.த சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ் உட்பட 3 திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி.

**02. எழுதுனர்**

பதவியின் தன்மை :- நிரந்தரம்
வெற்றிட எண்ணிக்கை :- 01
சம்பள குறியீட்டு இலக்கம் :- 302/13
சம்பள அளவுத்திட்டம் :- (04/2018ன் படி)
16365 – 140x10 – 150x10 - 19265

**தகைமைகள் :-** அ) கூட்டுறவு ஊழியர் 14ஆவது சம்பளத் திட்டப் பதவியில் எழுதுநர் / காசாளர் / கணனிப் பக்க உருவாக்குனர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02ஆண்டு கால அனுபவம். / கூட்டுறவு ஊழியர் 15ஆவது சம்பளத் திட்டப் பதவியில் எழுதுநர் / காசாளர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி. / க.பொ.த சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் சிங்களம் / தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கி 03 திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட 06 பாடங்களுடனான சித்தி.

**03. கிராமிய வங்கி எழுதுனர்**

பதவியின் தன்மை :- நிரந்தரம்
வெற்றிட எண்ணிக்கை :- 01
சம்பள குறியீட்டு இலக்கம் :- 300/14
சம்பள அளவுத்திட்டம் :- (04/2018ன் படி)
15960 – 135x10 – 145x10 - 18760

**தகைமைகள் :-** அ) 1. கூட்டுறவு ஊழியர் 15ஆவது சம்பளத்திட்டத்தில் எழுதுநர் பதவியில் 02 வருட அனுபவம் அத்துடன் கணனியை உபயோகித்து பணியாற்றும் ஆற்றலை உறுதிப்படுத்தும் அனுபவச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். / கூட்டுறவு ஊழியர் 16ஆவது சம்பளத்திட்டத்தில் எழுதுநர் பதவியில் 04 வருட அனுபவம் அத்துடன் கணனியை உபயோகித்து பணியாற்றும் ஆற்றலை உறுதிப்படுத்தும் அனுபவச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

2. கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டத்தில் கணனிப் பக்க உருவாக்குனர் பதவியில் 02 வருட அனுபவம். /

கூட்டுறவு ஊழியர் 16ஆவது சம்பளத்திட்டத்தில் கணனிப்பக்க உருவாக்குனர் பதவியில் 04 வருட அனுபவம்.

**அல்லது**

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரணதராதரப் பரீட்சையில் சித்தி. /க.பொ.த சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் தமிழ். கணிதம் உட்பட 6 பாடசித்தி அத்துடன அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் 3 மாதங்களுக்கு குறையாத MS Office கற்கை நெறி / அதனை ஒத்த கணனி கற்கை நெறியினைப் பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

அ) பிரிவு அல்லது ஆ) பிரிவு தகைமைப் பிரிவில் பணிக்கு இணைக்கப்பட்டவர்கள் தமது தகுதிகாண் காலத்தினுள் மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் கிராமிய வங்கியியல் கற்கை நெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**04. சாரதி**

பதவியின் தன்மை :- நிரந்தரம்
வெற்றிட எண்ணிக்கை :- 01
சம்பள குறியீட்டு இலக்கம் :- 312/14
சம்பள அளவுத்திட்டம் :- (04/2018ன் படி)
15960 – 135x10 – 145x10 - 18760

**தகைமைகள் :-** அ) 5ஆம் தர கல்விச் சான்றிதழுடன் பேரூந்து / லொறி / பெட்டியுடன் கூடிய உழவு இயந்திர சாரதி அனுமதிப் பத்திரத்துடன் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

**குறிப்பு**

* வயதெல்லை 18 – 45 வரை
* முல்லைத்தீவு மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாக கொண்டிருத்தல்.
* சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
* வேறு கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பிப்பவர்கள் தங்கள் கடமையாற்றும் சங்கம் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.
* எவரேனும் ஒருவர் கூட்டுறவுச் சங்கத்தில் சேவையாற்றுகின்ற அதே வேளையில் நேரடியாக விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ளார் எனின் அவர் தெரிவு செய்யப்பட்டதன் பின்னரேனும் தெரியவருமாயின் பதவி இழப்பிற்கு அது ஒரு காரணமாக அமையும்.
* கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்று நிருபங்கள் 04/2017/(1). 04/2018(1) ற்கு அமைய வாழ்க்கை செலவு படியும். விசேட செயலாற்றுகைப் படியும் வழங்கப்படும்.
* இப் பதவிக்கு விண்ணப்பங்கள் செய்யும் விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுமிடத்து சங்கத்திற்கு பிணைப்பணம் செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**சோ. றஞ்சிதவசந்தன் )**
**பாண்டியன்குளம் / துணுக்காய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கம்,**
**குளக்கட்டு, வவுனிக்குளம்.** (cs.29123) (N-1)



# டெங்கு பரவும் சூழலுக்கு சிவப்பு அறிவித்தல்கள்

## வலி.கிழக்கு பிரதேசசபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ. 4

வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் வலி.கிழக்கு பிரதேசசபையால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பராமரிப்பு இன்றி காணப்படும் பற்றைக்காணிகளை உடனடியாக துப்பரவு செய்யுமாறு ஒலிபெருக்கி மூலமான அறிவித்தல் வழங்கப்பட்டு வருவதுடன் பிரதேசசபையின் உத்தியோகத்தர்களினாலும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினாலும் அடையாளம் காணப்படும் பற்றைக்காணிகளுக்கு சிவப்பு அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்டு வருகின்றது.

பற்றைக்காணிகளாக காணப்படுகின்ற காணிகளின் உரிமையாளர்கள் பலர் புலம்பெயர் தேசங்களில் வசித்து வருபவர்களாக இருப்பதனால் பற்றைக்காணிகள் பராமரிப்பின்றி வருடக்கணக்காக காணப்படுவதனாலும் டெங்கு நுளம்புகள் பெருகக் கூடிய ஏது நிலைகள் காணப்படுகின்றன.

காணிக்குரிய உரிமையாளர்கள் தங்களது பராமரிப்பாளர்கள் மூலமாக பற்றைக்காணிகளை துப்பரவு செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் தற்போது சட்ட நடவடிக்கைகள் இறுக்கமாக முன்னெடு கப்பட்டு வருவதனால் பொதுமக்கள் தாங்கள் வாழும் சூழலை தூய்மையாக பேணுமாறும் அறிவுறுத்தப் பட்டுள்ளது. (ச-100)

# மரண அறிவித்தல்

தோற்றம்
24
04
1966



மறைவு
01
11
2024

## அருளானந்தம் யேசுதாசன்

இராசாவின் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் றக்கா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் யேசுதாசன் கடந்த 01.11.2024 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளானந்தம் (கோசி) - லில்லிமணி (மணி) தம்பதியரின் அன்பு மகனும், அந்தோனிப்பிள்ளை மற்றும் காலஞ்சென்ற திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மேரி அஞ்சலாவின் பாசமிகு கணவரும், டிக்சனின் அன்புத் தந்தையும், பிரபாலினியின் மாமனாரும், பிரணீத்தின் பாசமான பேரனும், யூலியட் றஞ்சினி, அன்னரனீற்றா, காலஞ்சென்றவர்களான யூலியட் றமீலா, ரஞ்சன் மற்றும் அடைக்கலதாசன், அன்ரன், காலஞ்சென்ற அமலதாசன் மற்றும் லோகேஸ்வரி (ராசாத்தி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிரான்சிஸ், றோசவேகன், வாசுகி, அருணா, குலசேகரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (04.11.2024) திங்கட்கிழமை புனித திரேசாள் ஆலயத்தில் திருப்பலி முற்பகல் 10.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**9/24, றக்கா வீதி,**
**சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.** (cs.29230) N-1)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுக்குள் முதலை; பீதியடைந்த மக்கள்

வவுனியா, நவ. 4
வவுனியா பூந்தோட்டம் பகுதியில் வீட்டு வளாகத்துக்கு முதலை ஒன்று வந்தமையால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.
வவுனியாவில் பருவமழை ஆரம்பித்துள்ளதுடன் கடந்தசில நாள்களாக மழையுடனான காலநிலை நிலவி வரும் நிலையில் பூந்தோட்டம் பகுதியில் உள்ள காணி ஒன்றுக்குள் சுமார் நான்கடி நீளம் கொண்ட முதலை ஒன்று புகுந்துள்ளது. இதனையடுத்து வீட்டின் உரிமையாளரால் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து. சம்பவ இடத்துக்குச் சென்ற வவுனியா பொலிஸார் குறித்த முதலையை அங்கிருந்து அகற்றினர். (சு-110)

# இளைஞன் மீது தாக்குதல்

வடமராட்சி கிழக்கு, கட்டைக்காட்டில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவர்மீது இனந்தெரியாதோரால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலில் காயமடைந்த 23 வயது இளைஞர் நேற்று வீதியில் வீசப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
விசுவமடு, கண்ணகி நகரைச் சேர்ந்த இ. விதுசன் என்ற இந்த இளைஞர் கடற்றொழில் நிமித்தம் கட்டைக்காட்டில் தங்கிருந்தார் என்றும் நேற்று மாலை இனந்தெரியாத மூவர் இளைஞருடன் தர்க்கத்தில் ஈடுபட்டு தலைக்கவசத்தால் தாக்கினர் என்றும் கூறப்படுகின்றது.
காயங்களுக்குள்ளான இளைஞர் மருதங்கேணி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுப் பின்னர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளார். இந்தச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் மருதங்கேணிப் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றன. (எ-100)

# அரச, தனியார் ஊழியர் வாக்களிக்க விடுமுறை

எதிர்வரும் பொதுத்தேர்தலில் அரச மற்றும் தனியார்த்துறை ஊழியர்களுக்கு விடுப்பு இழப்பு இன்றி வாக்களிக்கக்கூடிய வகையில் விடுமுறை வழங்குவது தொடர்பான விதிமுறைகளைத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.
மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிவிப்பின் அடிப்படையில் தனியார் துறை ஊழியர்கள் சம்பளம் அல்லது தனிப்பட்ட விடுப்பு இழப்பின்றி வாக்களிக்கும் முறை உருவாக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
அதன்படி, பணியிடத்திலிருந்து வாக்களிப்பு நிலையத்துக்கு 40 கிலோமீற்றர் அல்லது அதற்கும் குறைவான தூரம் இருந்தால் அரை நாள் விடுமுறையும், 40 -100 கிலோமீற்றர் வரை இருந்தால் குறைந்தபட்சம் ஒரு நாள் விடுமுறையும் அளிக்கவேண்டும்.
100-150 கிலோமீற்றர் தூரம் என்றால் ஒன்றரை நாள்களும், 150 கிலோமீற்றருக்கு அதிகமாக இருந்தால் 2 நாள்களும் அவகாசம் அளிக்க வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு கூறியுள்ளது.
இருப்பினும், இதற்காக, பணியாளர்கள் உரிய விடுமுறைக் கோரிக்கையை எழுத்துப்பூர்வமாக நிறுவனத் தலைவரிடம் வழங்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

## நாடாளுமன்றத்...

நாடாளுமன்றத்தைக் கலைப்பது தொடர்பாக ஜனாதிபதியால் வெளியிடப்படும் வர்த்தமானியில் நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் புதிய நாடாளுமன்றக் கூட்டத்தொடர் திகதி என்பன அறிவிக்கப்பட்டிருக்கவேண்டும். அதன் அடிப்படையில் தேர்தல் திகதியாக நவம்பர் 14 ஆம் திகதியும், புதிய நாடாளுமன்றக் கூட்டத்தொடருக்கான நாளாக நவம்பர் 21ஆம் திகதியும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.
அதேநேரம், தேர்தல் திகதிக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட தினத்துக்கும் வாக்களிப்பு நடைபெறவேண்டிய தினத்துக்கும் இடையில் உள்ள காலம் தொடர்பாகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தக் காலக் கணக்குக்கு ஒரு நாள் முன்னதாக இப்போது பொதுத்தேர்தல் திகதியிடப்பட்டுள்ளது என்று கூறப்படும் நிலையிலேயே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுமீதான பரிசீலனை உயர்நீதிமன்றத்தில் இன்று இடம்பெறவுள்ளது.
இந்த மனுவின் பிரதிவாதிகளாக ஜனாதிபதியின் சார்பில் சட்டமா அதிபர், ஜனாதிபதியின் செயலாளர், தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் உட்பட அதன் அங்கத்தவர்கள் பெயரிடப்பட்டுள்ளனர்.
தேர்தல்கள் ஆணைக்குழு சார்பில் சட்டமா அதிபர் தரப்பில் இது தொடர்பில் நீதிமன்றத்துக்கு விளக்கமளிக்கப்படும். இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவால் சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள விளக்கக் கடிதத்திலேயே தேர்தல் நிர்ணயிக்கப்பட்ட திகதி சரியெனவும், அதில் தவறில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (அ-எ-44)

## இனவாதத்தை...

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.
கண்டியில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக்கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
ஜனாதிபதி அநுரவின் வெற்றியை இந்த நாட்டில் கௌதம புத்தர் திடீரென மேலிருந்து இறங்கிவந்ததுபோல தோற்றப்பாட்டை ஏற்படுத்துவதற்கு சிலர் முற்படுகின்றனர். ஆனால் இந்த நாட்டில் இனவாதம் இன்னும் உள்ளது. எனவே, எமக்கான தமிழ்ப் பிரதிநிதித்துவம் அவசியம்.
எமக்கான பிரதிநிதித்துவத்தையும் அநுரவின் கைகளுக்கு வழங்கிவிடமுடியாது. அவ்வாறு வழங்க முற்பட்டால் அது ஆபத்தாகும். நல்லாட்சிக் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசமைப்புப் பணி இறுதிப்படுத்தப்படும் என ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். அனைத்து இன மக்களினதும் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் அந்த நடவடிக்கை அமைந்தால் நிச்சயம் வரவேற்போம்.
நாங்கள் சிங்கள - பௌத்தர்கள் அல்லாதவர்கள் என்பதால்தான் ஜனாதிபதி, பிரதமர் பதவிக்கு வரமுடியாதுள்ளது. சட்டம் அதற்குத் தடையாக இல்லை. இவ்வாறான சூழ்நிலையில் எமது பிரதிநிதித்துவத்தின் முக்கியத்துவத்தை தமிழ் பேசும் மக்கள் உணரவேண்டும். அநுர இன்று கூறும் விடயங்களையெல்லாம் நாம் 10 வருடங்களுக்கு முன்னரே கூறிவிட்டோம் - என்றார். (அ-எ-44)

## அநுரவின்...

தேர்தல் முடிந்தபின்னர் சர்வதேச நாணயநிதியத்தின் உயர் மட்டக் குழு ஒன்று கொழும்புக்கு வரவுள்ளது. அந்தக் குழுவின் மேலதிக உறுதிப்பாடுகளின் அடிப்படையில் மூன்றாவது நீடிக்கப்பட்ட கடன் வசதி அடுத்த ஆண்டில் இலங்கைக்கு கிடைக்கவுள்ளது.
மூன்றாவது நீடிக்கப்பட்ட கடன்வசதி கிடைக்க முன்னர் 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவேண்டும். அதனால் எதிர்வரும் மார்ச் மாதம் புதிய அரசாங்கத்தின் கன்னி வரவு - செலவுத் திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-எ-இ)

## கணக்கு...

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையான அரசாங்க ஊழியர்களின் சம்பளம் உட்பட அரசாங்கப் பணிகளை தடையின்றி முன்னெடுப்பதற்குரிய ஏற்பாடாகவே கணக்கு வாக்குப் பணம் முன்வைக்கப்படவுள்ளது. ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்டம் (பாதீடு) இல்லாத சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தின் செலவினங்களை முன்னெடுப்பதற்காக நிதி ஒதுக்கீடுகளை செய்வதற்காக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானமே கணக்கு வாக்குப் பணம் ஆகும்.
புதிய நாடாளுமன்றக் கூட்டத்தொடர் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. வாக்குப் பணத்துக்குரிய தீர்மானம் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது எனவும், அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்ட பின்னர் எதிர்வரும் 21 ஆம் திகதிக்குப் பின்னர் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.
அதேவேளை, அநுர அரசாங்கத்தின் 2025 ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டம் பெப்ரவரி அல்லது மார்ச் மாதத்தில் முன்வைக்கப்படவுள்ளது. (அ-எ-44)

## 3 லட்சம்...

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரிசித் தட்டுப்பாட்டைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.
இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த விவசாய அமைச்சின் செயலாளர், அரிசி ஆலை உரிமையாளர்கள் அரிசியைப் பதுக்கி வைத்துள்ளதாலேயே நாட்டில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.
அதேநேரம், அடுத்த பெரும்போகத்தின்போது 3 இலட்சம் தொன் அரிசியை உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-எ-6)

## மாணவர்களுக்கு...

இருந்திருந்தால் அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தை ஒரே நேரத்தில் அதிகரித்திருக்கமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## சட்ட...

வர்களுக்கு நீதிமன்றத்தின் ஊடாகக் கட்டளை அனுப்பப்படும் என்றும் அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
நீதிமன்றக் கட்டளையை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்படும் என்று தெரிவித்துள்ள லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு, சில அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் தங்களின் உறவினர்களின் பெயர்களில் சொத்துச் சேர்த்துள்ளனர் என்றும், அவர்கள் தொடர்பாகவும் தற்போது ஆராயப்படுகின்றது என்றும் தெரிவித்துள்ளது. (அ-எ-6)

## இதுவரை...

பாக இதுவரை ஆயிரத்து 408 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பாகத் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 364 முறைப்பாடுகளும், மாவட்டத் தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 995 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.
இதேவேளை - மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 14 முறைப்பாடுகளும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 35 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-இ)

## வாகன...

வாகன இலக்கத்தகடு அச்சிடும் நிறுவனத்துக்குப் பணம் செலுத்துவதற்கு ஏற்பட்ட தாமதத்தாலேயே விநியோக நடவடிக்கை தடைப்பட்டுள்ளது.
இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிசாந்த வீரசிங்க, தற்போது அந்த நிறுவனத்துக்குச் செலுத்தவேண்டிய நிலுவைத் தொகையை செலுத்துவதற்கு அனுமதி கிடைத்துள்ளது என்று தெரிவித்தார்.
வாகன இலக்கத் தகடு விநியோகிக்கப்படாத சந்தர்ப்பத்தில் வாகன இலக்கத்தை வாகன உரிமையாளர்களிடம் தற்காலிகமாக அச்சிட்டுக் காட்சிப்படுத்த முடியும் என்று மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ-எ-இ)

## 9 மாதங்களில்...

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.
அவர்களில் 99 ஆயிரத்து 939 பேர் வீட்டுப் பணிப்பெண்கள் என்றும், 70 ஆயிரத்து 396 பேர் பயிற்றப்பட்ட பணியாளர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சனநாயக தமிழரசுக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீடு!

யாழ்ப்பாணம், நவ.4

நாடாளுமன்றத் தேர்தலில் மாம்பழச் சின்னத்தில் போட்டியிடும் சனநாயகத் தமிழரசுக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் யாழ்ப்பாணத்தில் நேற்று வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மாம்பழச் சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சைக் குழு 14 இன் வேட்பாளர்கள், மற்றும் ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர். (அ-எ-இ)

## பெற்றோருக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ.4

கோண்டாவில் றோ.க.த.க. பாடசாலையின் மாதிரிச் சந்தை நிகழ்வு ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான பெற்றோர்களுடனான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை காலை 9 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அனைத்து மாணவர்களின் பெற்றோர்களும் கலந்துகொள்ளவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (எ-66)

இன்னும் ஓரிரு நாட்களே உள்ளன
அமெரிக்க லொத்தர் இலவச விசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2026ல் நீங்களும் அமெரிக்காவில்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம் A/L
V2 Travels
0768226244

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி நெய்தல் நகருக்கு அருகாமையில் 132 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

**நிலப்பரப்பு**

- ▲ 20 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ▲ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்.
- ▲ அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.

**ஒரு பரப்பின் விலை**

- ▲ நெய்தல் நகர் பிரதான வீதியை முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்
- ▲ கடற்கரையை (Beach) முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்
- ▲ 20 அடி பாதையை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் அனைத்தும் 9,75000 ரூபாய் மட்டுமே

- ▲ தரகர் தேவையில்லை
- ▲ பார்வையிடும் நேரம் – காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

**தொடர்பு: ஜெயம்**

**077 8147 389**
**077 986 5457**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.11. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.